மின் அஞ்சல் மூலமாக

அனுப்புநர்
திரு. ஹேமந் குமார் சின்ஹா, இ.ஆ.ப.,
நகராட்சி நிர்வாக ஆணையர்,
எழிலக இணைப்பு கட்டிடம், 6வது தளம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

பெறுநர்
அனைத்து நகராட்சி நிர்வாக
மண்டல இயக்குநர்கள்.

அனைத்து மாநகராட்சி
ஆணையர்கள்.

ந.க.எண்.48786/2003/வேப்-2, நாள்:04.05.2004.

ஐயா,

பொருள் : பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் – தனி நபர் மாத வருமானம் ரூ.500.93 அடிப்படையில் வறுமை கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் அடங்கிய அறிக்கைகளை அனுப்பியது – தொடர்பாக.

பார்வை : இதே எண்ணுள்ள இவ்வலுவலக கடித நாள்:17.2.2004, 24.2.2004 மற்றும் 17.3.2004.

******

நகராட்சி/மாநகராட்சிகளிலிருந்து வரப்பெற்ற வறுமைகோட்டுக்குகீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் அடங்கிய அறிக்கைகளை ஆய்வுசெய்யப்பட்டு வருகிறது. அறிக்கையில் காணப்பட்ட குறைகளை/பிழைகளை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களுக்கு தனித்தனியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை ஆய்வு செய்யப்பட்டதில், பெரும்பாலான நகராட்சிகளில், புள்ளிவிபரப் படிவங்களில் (Survey Formats), புள்ளிவிபரம் எடுப்பவர்கள் தன் இஷ்டம்போல் மாத வருமானத்தை குறைத்து போட்டுள்ளார்கள். குடும்ப உறுப்பினர்களின் வேலைவாய்ப்பு நிலை/தொழிலின் தன்மையை, கல்விநிலையை ஆராயாது/நினைவில் வைத்துக்கொள்ளாமல், சொத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளாது மாத வருமானத்தை குறைத்து போட்டுள்ளதால், தனிநபர் மாத வருமானம் ரூ.475.60 முதல் ரூ.500.93 வரை உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை அதிகம் வந்துள்ளது. இதனால் வறுமையின் சதம் கூடியுள்ளது. அரசின் சமீபத்திய அறிவுரையின்படி, தற்போதைய வறுமையின் மதிப்பீட்டை (ரூ.500.93 வரை) கணக்கில்கொண்டு, வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களை கணக்கெடுக்கும்போது (recast the survey), மேற்பார்வையாளர்கள்/களப்பணி அலுவலர்கள்/செயலாக்க அலுவலர்கள்/ஆணையர்கள் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை சரியாக பரிசோதிக்கவில்லை என்று தெரிகிறது. உதாரணமாக, ஒரு நகராட்சியின், தனிநபர் மாத வருமானம் ரூ.475.60 அடிப்படையில் வறுமைக்கோட்டுக்குகீழ் உள்ள

குடும்பங்களின் எண்ணிக்கை 21 சதம் என்றால், அந்நகராட்சியில் ரூ.500.93-க்கு வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 22.12 சதம் வரை மட்டுமே இருக்கக்கூடும். இப்படி பின்பற்றவேண்டும் என்று பல ஆய்வுக்கூட்டங்களில் எடுத்துக்கூறப்பட்டது.

எனவே, இதுவரை அறிக்கைகளை அனுப்பாத நகராட்சி/மாநகராட்சி ஆணையர்கள் இனிமேல் மேற்கண்ட அறிவுரையை பின்பற்றி அறிக்கைகளை உடனே அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களும் மற்றும் மாநகராட்சி ஆணையர்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை சரியாக பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5/1 நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

நகல்

1. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை-108.

2. இயக்குநர்,
   தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையம்,
   கோயம்புத்தூர்.

3. அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

| | | வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையின் சதம் வருடவாரியாக ஒப்பிடுதல் | | | வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையின் சதம் | | | நகராட்சி நிர்வாக ஆணையரகத்துக்கு ரூ.500.93 அடிப்படையில், அனுப்பப்பட்ட விபரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | அறிக்கைகள் | | சிடிகளின் எண்ணிக்கை | | |
| வ. எண் | மாவட்டம் வாரியாக நகராட்சியின் பெயர் | 1998 (ரூ.381.04) | 2003 (ரூ.475.60) | 2004 (ரூ.500.93) | 1998ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டில் கூடியுள்ள சதம் | 1998ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டில் குறைந்து உள்ள சதம் | 2003ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டில் கூடியுள்ள சதம் | அனுப்பப்பட்ட ஆங்கில அறிக்கையின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட தமிழ் அறிக்கையின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட தமிழ் சிடி. எண்ணிக்கை | அனுப்பப்பட்ட ஆங்கில சிடி. எண்ணிக்கை | குறிப்பு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | |

நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.



| | | வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையின் சதம் வருடவாரியாக ஒப்பிடுதல் | | | வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையின் சதம் | | | நகராட்சி நிர்வாக ஆணையரகத்துக்கு ரூ.500.93 அடிப்படையில், அனுப்பப்பட்ட விபரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | அறிக்கைகள் | | சிடி. எண்ணிக்கை | | |
| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | 1998 (ரூ.381.04) | 2003 (ரூ.475.60) | 2004 (ரூ.500.93) | 1996ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டில் கூடியுள்ள சதம் | 1998ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டில் குறைந்து உள்ள சதம் | 2003ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டில் கூடியுள்ள சதம் | அனுப்பப்பட்ட ஆங்கில அறிக்கையின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட தமிழ் அறிக்கையின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட தமிழ் சிடி. எண்ணிக்கை. | அனுப்பப்பட்ட ஆங்கில சிடி. எண்ணிக்கை. | குறிப்பு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | | | | | | | | | | | | |

நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.